2004 ஜூலை 31] [திரு. கே.வி. முரளிதரன்]

காரணத்தினால், கால்நடைகளை அந்த மருத்துவமனைக்குக் கொண்டு வரவேண்டுமென்றால், 25 கி.மீ. 30 கி.மீ. கொண்டு வர வேண்டும். அதற்கு, மேல் பேவநத்தம், தொட்டபேளூர், கும்ளாபுரம், மாடக்கல், உரிகம், கோட்டையூர், தக்கட்டி, நாட்றாம்பாளையம், மஞ்சுகொண்டபள்ளி ஆகிய ஊர்களில் கால்நடை கிளை நிலையங்கள் இந்த ஆண்டு அமைத்துத்தர கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் முன்வருவாரா எனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாகக் கால்நடை கிளை நிலையங்கள் அமைக்க மாநில திட்டக் குழு விதித்துள்ள தடை இன்னும் அமலில் உள்ளது. ஆகவே, அங்கே புதிய கால்நடை கிளை நிலையங்கள் தற்போது துவக்க வாய்ப்பு இல்லை. இருந்தாலும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணை பெற்று, தகுதிக்கேற்ப, கால்நடை கிளை நிலையங்கள் ஏற்படுத்துவது பற்றிப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–30

3. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. கே.என். இலட்சுமணன் அவர்கள்.

திரு. கே.என். இலட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். 2003–2004 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 221 முதல் 246 வரையிலான 26 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள். முனைவர் மு. தம்பிதுரை.

டாக்டர் மு. தம்பிதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003–2004 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 153 முதல் 158 வரையிலான 6 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.